சிவகங்கை மாவட்டத்தில்

ரூ.34 கோடி மதிப்பீட்டில் 442 கண்மாய்கள் தூர்வாரும் பணி

அமைச்சர் பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்

திருப்புத்தூர், மே 3: திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியம், காட்டாம்பூர் ஊராட்சிக்குட்பட்ட கொளுஞ்சிபட்டி கிராமத்தில் அமைந்துள்ள மருதன் கண்மாய் தூர்வாருதல் மற்றும் கரை பலப்படுத்துதல் பணியினை, ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் சிறுபாசன கண்மாய்கள் புத்துயிர் ஊட்டுதல் திட்டம் 2024-25ன் கீழ் நேற்று கலெக்டர் ஆஷா அஜித் தலைமையில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும் அமைச்சர் பெரியகருப்பன் பேசுகையில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் சிறுபாசன கண்மாய்கள் புத்துயிர் ஊட்டுதல் திட்டம் 2024-25ன் கீழ் சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் ரூ.34.00 கோடி மதிப்பீட்டில் 442 சிறு கண்மாய்கள் தூர்வாரும் பணி மேற்கொள்வதற்கென அரசாணை பெறப்பட்டு, சிறு கண்மாய்களில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் தொடக்கமாக திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியம், காட்டாம்பூர் ஊராட்சிக்குட்பட்ட கொளுஞ்சிபட்டி கிராமத்திலுள்ள மருதன் கண்மாயில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள கண்மாய்தூர்வாருதல் மற்றும் கரைகளை பலப்படுத்தும் பணி இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள சிறு கண்மாய்கள் சீரமைப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது. இதுதவிர, கலெக்டரின் பெரும் முயற்சியின் காரணமாக, அரசுடன் இணைந்து நீர்நிலைகளை பாதுகாத்திட பல்வேறு தனியார் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் தங்களது பங்களிப்பை அளித்திட முன்வந்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நீர்நிலைகளை சீரமைக்கும் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஒன்றிய செயலாளர்கள் சண்முக வடிவேல், குன்றக்குடி சுப்பிரமணியன், விராமதி மாணிக்கம், காட்டம்பூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராமநாதன், மாவட்ட பிரதிநிதிகள் தங்கமணி, வையிரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

▶ காரைக்குடியில் திமுக மாநில தலைமை பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கேஎஸ்.ரவி, கலைஞர் தமிழ்ச்சங்க செயலாளர், எஸ்கேசி நிறுவனங்களின் தலைவர் தொழிலதிபர் மாநில முதுநிலை ஒப்பந்ததாரர் டி.செந்தில்குமார் பிறந்தநாளை முன்னிட்டு வாழ்த்தினார்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு

கோடை கொண்டாட்ட நிகழ்ச்சி தொடக்கம்

▶ சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடந்த கோடை கொண்டாட்டம் நிகழ்ச்சி தொடக்க விழாவில் கலெக்டர் ஆஷாஅஜித் பேசினார்.

சிவகங்கை, மே 3: சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை சார்பில் 1ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை படிக்கும் பள்ளி மாணாக்கர்களுக்கான கோடை கொண்டாட்டம் நிகழ்ச்சி தொடக்க விழா நடைபெற்றது.

கலெக்டர் ஆஷாஅஜித் தொடங்கி வைத்து பேசியதாவது: பள்ளிக்கல்வித்துறையில் மாணவ, மாணவிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. அதில் கல்வி மட்டுமன்றி, தனித்திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, பள்ளிக் கல்வித்துறை சார்பில் பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது கோடை விடுமுறைகள் விடப்பட்டுள்ளதால், விடுமுறையை பயனுள்ள வகையில் கழிக்க மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக் கல்வித்துறை சார்பில் கோடை கொண்டாட்ட நிகழ்ச்சிகள் 15 நாட்கள் நடைபெற உள்ளது. ஆங்கிலம் பேசுதல், கதை கூறுதல், போட்டோ சூட் வீடியோ உருவாக்குதல், செஸ் உள்ளிட்ட 12 பல்வேறு வகையான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. சிறப்பு பயிற்சி வகுப்புகள் மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை மட்டும் நடைபெறும். கடந்த ஆண்டில் 8நாள்கள் மட்டும் நடைபெற்ற கோடை கொண்டாட்ட நிகழ்ச்சி, பெற்றோர்களின் கோரிக்கை, மற்றும் மாணவ, மாணவிகளின் ஆர்வத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு 15 நாட்கள் நடைபெறுகிறது. இதில், பெற்றோர்கள் தனி கவனம் செலுத்தி, குறிப்பிட்ட நேரத்தில் தங்களது குழந்தைகளை பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள செய்தல் வேண்டும். இவ்வகையான பயிற்சிகள் மாணவ, மாணவிகளுக்கு ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை மேம்படுத்தும் பொருட்டு, அவர்களின் மனநிலையை சீராக வைக்கவும், புதிதாக கற்றுக்கொள்வதற்கும் இக்கோடை கொண்டாட்ட நிகழ்ச்சி அடிப்படையாக அமையும். இதில் பங்கு பெற 250க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பதிவு செய்துள்ளனர். விருப்பமுள்ளவர்கள் நேரடியாக வருகை தந்து பதிவு மேற்கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து, மாவட்ட கல்வி அலுவலர்கள் விஜயசரவணகுமார் (தனியார் பள்ளிகள்), ஜோதிலட்சுமி (தொடக்க நிலை) மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சனிதோறும்
ஆன்மிக மலர்
படியுங்கள்

மகா சபை கூட்டம்

சாயல்குடி, மே 3: கடலாடி தேவர் மகா சபை கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு தலைவர் கோபால கிருஷ்ணன் தலைமை வகித்தார், பொருளாளர் செல்லப்பாண்டி, செயலாளர் சுபாஷ்சந்திரபோஸ் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தீர்மானங்கள் இயற்றப்பட்டது. இதில் கடலாடி தாலுகா தலைமையிட மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் உள்ளிட்ட காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும், பிரசவ வார்டு துவங்கி பெண் மருத்துவர்கள் நியமிக்க வேண்டும். கோவை, மதுரை-கடலாடி, கடலாடி-அருப்புக்கோட்டைக்கு முறையாக பஸ்களை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், தேவர்சிலை முதல் காமராஜர் சிலை வழியாக யூனியன் முக்குரோடு வரையிலும் மழைநீர் வடிகால் கால்வாயுடன் கூடிய புதிய சாலை அமைக்க வேண்டும் என்பதுள்ளிட்ட தீர்மானங்கள் இயற்றப்பட்டது.

ஜிஹெச்சிற்கு கூடுதலாக டவுன் பஸ் இயக்க கோரிக்கை

காரைக்குடி, மே 3: காரைக்குடி சூரக்குடி சாலையில் உள்ள அரசு தலைமை மருத்துவமனைக்கு பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் சிகிச்சைக்கு வருகின்றனர். இவர்கள் புதிய பஸ் ஸ்டாண்டில் இறங்கி மருத்துவமனைக்கு செல்ல போதிய அளவில் டவுன்பஸ் இல்லாததால் ரூ 300 கொடுத்து ஆட்டோ பிடித்த செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இந்த பகுதிக்கு கூடுதலாக டவுன்பஸ் இயக்கப்படும் பட்சத்தில், பாண்டியன் நகர், கேவிஎஸ் நகர், கே.கே. நகர், கம்பன் நகர், மாருதி நகர், விஏஓ காலனி, தாசில்தார் நகர், ஹவுசிங் போர்டு, காவலர் குடியிருப்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி மக்களுக்கு பெரும் பயனாக அமையும் என மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

மானாமதுரையில் பிளக்ஸ், பேனர்கள் அகற்றம்

மானாமதுரை, மே 3: மானாமதுரை சித்திரை திருவிழாவினை முன்னிட்டு அதிமுக பாஜக உள்ளிட்ட அரசியல் கட்சியினர், பல்வேறு அமைப்புகள் சார்பில் நகர் முழுவதும் அனுமதியின்றி ப்ளக்ஸ் பேனர்கள் வைக்கப்பட்டிருந்தன. இதுதொடர்பாக வார்டு கவுன்சிலர்கள் உள்ளிட்ட சிலர் நகராட்சி நிர்வாகத்திடம் புகார் செய்திருந்தனர். இதையடுத்து பிளக்ஸ் பேனர்களை அகற்றுவதற்கு நகராட்சி நிர்வாகம் சார்பில் போலீசாருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இதன் எதிரொலியாக மானாமதுரை டிஎஸ்பி நிரேஷ் தலைமையில் போலீசார் அனுமதியின்றி வைக்கப்பட்டிருந்த பேனர்களை தாங்களாவே அகற்ற வேண்டும், தவறும் பட்சத்தில் சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தபட்டவர்களுக்கு அறிவுறுத்தினர். இதன்படி நேற்று மானாமதுரையில் வைக்கப்பட்டிருந்த பேனர்கள் அகற்றப்பட்டன.

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-A - அசையாச் சொத்து/க்களின் மின்-ஏல-பொது விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்: 9ஆவது தளம், ஆண்ட்ரிக்ஷ் பவன், 22 கஸ்தூர்பா காந்தி மார்க், புது தில்லி – 110001. தொலைபேசி எண்கள்: 011-23357171, 23357172, 23705414. இணையதளம்: www.pnbhousing.com

கிளை அலுவலகம்: மதுரை: நந்தினி கட்டடம், 3ஆவது தளம், 48#, புறவழிச்சாலை, மதுரை 625010.

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் பத்தி எண் A–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது என்னவென்றால், ஈடு பெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் M/s. PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் (பத்தி எண் C–இல் குறிப்பிட்டுள்ளபடி) முறையாக / நேரடி வைத்தோம் செய்யப்பட்டுள்ளவையான கீழே பத்தி எண் D–இல் விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து(க்கள்) "உள்ளது உள்ள இடத்தில்", உள்ளது உள்ளபடி", மற்றும் உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி விற்பனை செய்யப்படும். இந்த அறிவிப்பானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9 & (6)8 ஆகியவற்றின் தேதிவரை திருத்தப்பட்ட வகையினைபடி கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / தொடர்புடைய கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) (இவர்களில் காலஞ்சென்றவர்கள் இருந்தால்) ஆகியோரின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதிகள் (தெரிந்த அல்லது தெரியாதவர்கள்), செயல்படுத்துநர்(கள்), நிர்வாகி(கள்), உரிமை பெறுபவர்(கள்), ஒப்படைப்புப் பெற்றவர்(கள்) என பத்தி எண் A–இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கான; விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்று கடனளித்தவரான M/s. PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் www.pnbhousing.com இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

கடன் எண் / கடன்தாரர் / உப கடன்தாரர் / ஜாமீன்தாரர் / சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை மற்றும் தேதி (B)	சுவாதீன வகை (C)	அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்பு தொகை (EMD) (நிர்ணய விலையில் %10) (F)	விலைப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி தேதி(G)	விலைப்புள்ளி உயர்த்தும் மடங்கு (H)	ஆய்வு தேதி மற்றும் நேரம் (I)	ஏல தேதி மற்றும் நேரம் (J)	ஒதுக்கீடு விலைக்கான / நிர்ணய வழக்கு, ஏதும் கேழ்க்கள் (K)
HOU/MDU/0721/900449 ராம்குமார் சண்முக கனி சீதாலக்ஷ்மி சண்முக கனி கி.அ:மதுரை	RS. 2707558,12 15-04-2024	கையக சுவாதீனம்	சர்வே எண் 7/7, மனை எண் 10, துர்கா காலனி, மதுரை இசை பேதை T M சௌந்தராஜன் நகர், நிலையூர் 1ஆவது துண்டு கிராமம், நிலையூர் விமானநிலையச் சாலை, திருப்பரங்குன்றம், மதுரை, தமிழ்நாடு–625005, மதுரை, இந்தியா.	RS. 2592000	RS. 259200	10-06-2025	RS.10 Thousand	21-05-2025, 11AM to 5 PM	11-06-2025,2PM to 3PM	ஏதுமில்லை

*இத்துடன் தொகை செலுத்தப்படும் மற்றும் / அல்லது பெறப்படும் தேதிவரையில் சேர்த்துள்ள உரிய 18% வட்டி, இடைநிக்கு செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள் முதலானவை. **PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உச்சபட்சமாகத் தெரிந்த வரையில் மேற்கூறிய அசையாச் சொத்துக்கள் / கடனீட்டுக் சொத்துக்கள் மீது பத்தி எண் K–இல் குறிப்பிட்டிருப்பது தவிர வேறு எந்த வில்லங்கங்களும் / உரிமைகோரல்களும் இல்லை. மேலும் அத்தகைய வில்லங்கங்களை வெற்றி பெறும் வாங்குநர் / ஏலதாரர் அவரது சொந்த செலவில் தீர்த்துக் கொள்ள / செலுத்த வேண்டும். ஆர்வமுள்ள வாங்குநர்(கள்) / ஏலதாரர்கள் குறிப்பிட்ட வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தாங்களாகவே உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (1.) தேதிவரை PNBHFL / PNBHFL–இன் அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்கூறிய அசையாச் சொத்துக்களை / கடனீட்டுச் சொத்துக்களை விற்க, மாற்ற மற்றும் / அல்லது பெயர் மாற்றத் தடையானவை மற்றும் / அல்லது நிதிமன்றத் தடை உத்தரவும் இல்லை. விவரம் பத்தி எண் K–இல் குறிப்பிட்டுள்ளது. (2.) பத்தி எண் K–இல் ஏதேனும் வழக்குகள் / உத்தரவுகள் முதலானவை இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தால் வாய்ப்புள்ள வாங்குநர் / ஏலதாரர் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்கள் அந்த வழக்கு ஆவணங்கள் / பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் போன்றவற்றைத் தாங்களாகவே பார்வையிடலாம். மேலும் ஒப்படைப்புள்ளிஎய / ஏல விண்ணப்பப் படிவத்தைத் சமர்ப்பிப்பதற்கு அல்லது விலை கோரலை முன்வைப்பதற்கு முன்பே PNBHFL நிறுவனத்திடம் உள்ள தொடர்புடைய உரிமை ஆவணங்கள் உட்பட அனைத்தையும் முழுமையாக ஆராய்ந்து நிறைவு செய்து கொள்ள வேண்டும். ஏலதாரர்கள் ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளிலும் கையொப்பமிட வேண்டும். (3.) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(3)–இன்படி ஏலதாரர்(கள்) / வாங்குநர் விற்பனை விலையில் 25% தொகையை (ஏற்கெனவே செலுத்திய முன்வைப்புத்தொகை சேர்த்து) அதே தேதியில் அல்லது அடுத்த வேலை நாளுக்குள் செலுத்தச் சட்டப்படி கட்டுப்பட்டவர் ஆவார் என்பதை நினைவில் கொள்க. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(2)–இன்படி இவ்வாறு விற்பனை விலையின் 25% தொகை வரப்பெற்ற பிறகே ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தால் ஏலதாரரின் / ஏலதாரர்களின் பெயருக்கு விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை விலையில் எஞ்சியுள்ள 75% தொகையை விற்பனை உறுதிப்படுத்தல் கடிதம் ஒப்புதல் செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் வாங்குநர் செலுத்த வேண்டும். தவறினால் இந்த சொத்து / கடனீட்டுச் சொத்து SARFAESI சட்ட விதிகளின்படி மறுவிற்பனை செய்யப்படும். (4.) E–ஏல முறையில் விற்பனையை நடத்துவதில் M/s C1 இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உதவும். இதன் பெருநிறுவன அலுவலக முகவரி: மனை எண் 68, 3ஆவது தளம், பிரிவு 44, குர்கான், அரியானா 122003. இணையதளம்: www.bankeauctions.com சொந்தை ஆய்வு செய்ய அல்லது ஏல ஆவணங்களைப் பெற மற்றும் மேலும் விவரங்கள் அறிய அல்லது பதிவு செய்து கொள்ள உதவி தேவைப்பட்டால் தொடர்பு கொள்ள வேண்டிய PNBHFL–இன் அதிகாரப்பூர்வ அலுவலர்கள்: நவீன் R / பிரீத்தி / மருது பாண்டியன் 9047973017/8667005160/8148101608, கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 120 8800, மின்னஞ்சல்: auction@pnbhousing.com அல்லது பார்க்கவும்: www.pnbhousing.com

இடம்: மதுரை தேதி: 03.05.2025 ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

சிவகங்கை நகராட்சி

மறு மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)

ந.க.எண்.1238/2025இ1 நாள்: 02.05.2025

சிவகங்கை நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு நிட்டம் 2025-26ம் ஆண்டு நிதியின் கீழ் தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள சிவகங்கை நகராட்சி ஆணையாளர் மூலம் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மறு மின்னனு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக இரண்டு உறைமுறையில் ஒப்பந்தப்புள்ளிகள் 20.05.2025ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

வ. எண்	சிப்பங்களின் எண்ணிக்கை	மதிப்பீட்டுத் தொகை	மின்னனு ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்தல்	மின்னனு ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்ய கடைசி நாள், நேரம்	மின்னனு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் காலம்	பணி செய்து முடிக்க வேண்டிய காலம்
1.	சிப்பம்-1 தார் சாலை அமைக்கும் பணி	ரூ.64.50 இலட்சம்	03.05.2025 -ம் தேதி முதல்	20.05.2025 பிற்பகல் 3.00 மணி வரை	20.05.2025 பிற்பகல் 3.30 மணி	4 மாதங்கள்
2.	சிப்பம்-2 பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி	ரூ.74.50 இலட்சம்				
3.	சிப்பம்-3 பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி	ரூ.40.90 இலட்சம்				

மின்னனு ஒப்பந்தப்புள்ளி விபர அட்டவணை மற்றும் நிபந்தனைகள் அடியில் கண்ட இணையதளத்தில் 03.05.2025ம் தேதி முதல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். https://tntenders.gov.in. மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளுக்கான முன் வைப்புத் தொகை பணி மதிப்பீட்டில் 1% வங்கி வரைவோலையாக தனி உறையில் வைத்து 20.05.2025 பிற்பகல் 03.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நகராட்சி ஆணையருக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவோ அல்லது மறுக்கவோ முழு அதிகாரம் உண்டு. மின்னனு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கும் பட்சத்தில் மறு வேலை நாளில் அதே நேரத்தில் மின்னனு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

இதர விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி : commr.sivagangai@tn.gov.in

ஆணையாளர்
சிவகங்கை நகராட்சி

வி.வெ.எண்: 58/2025/செ.ம.தொஅ/சிவகங்கை/ நாள்: 02.05.2025

ஆக்சிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்

தரைத்தளம் மற்றும் முதல்தளம், ஆல்பா மையம், #216, இரட்டைச் சாலை, 2ஆவது கட்டம், இந்திராநகர், பெங்களூரு 560002.

மின்-பொது ஏலம் மற்றும் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழான அசையாச் சொத்துக்களுக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு

பொதுமக்களுக்குப் பொதுவாகவும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால் கடன்தாரர் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் அதாவது **1) காட்சேவ் கிளினிக் (கடன்தாரர்), (2) ஜான் பீட்டர் ஜேசுதாஸ் (உப கடன்தாரர் I மற்றும் அடமானதாரர்) மற்றும் (3) பிரியங்கா (உப கடன்தாரர் II) (இனி "கடன்தாரர்கள்" என குறிப்பிடப்படும்)** ஆகியோரிடமிருந்து **24.04.2025 தேதிப்படி ரூ.3,73,78,111/-(ரூபாய் மூன்று கோடியே எழுபத்து மூன்று லட்சத்து எழுபத்தெட்டாயிரத்து நூற்று பதினொன்று மட்டும்) (சர்ஃபாசி சட்டம், பிரிவு 13(2)-இன்கீழ் வழங்கப்பட்ட 28.03.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின்படி நிலுவைத்தொகை ரூ.2,81,69,308/-(ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தொரு லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து முந்நூற்று எட்டு மட்டும்))** மற்றும் இறுதி தொகை /முழுமையாக செலுத்தப்படும் தேதிவரையிலான ஒப்பந்த விகிதப்படியான மேல்வட்டி, தவணை மீறிய/அபராத வட்டி மற்றும் இதர கட்டணங்கள் முதலானவற்றுடன் சேர்த்து திரும்பப்பெறும் பொருட்டு ஈடுபெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடகு/ அடமானம் வைக்கப்பட்டுள்ள ஆக்சிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் **கையக சுவாதீனம்** எடுக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் முறையில் 15.05.2025** அன்று விற்பனை செய்யப்பட உள்ளன. சொத்துக்கள், நிர்ணய விலை (RP), முன்வைப்புத் தொகை (EMD) விவரம் மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை– I

அசையாக் கடனீட்டுச் சொத்தின் விவரம்

மதுரை மாவட்டம், மதுரை தெற்குப் பதிவு மாவட்டம், மதுரை IVஆம் இணை துணை மாவட்டம், மதுரை தெற்கு தாலுகா, தற்போது திருப்பரங்குன்றம் தாலுகா, மாடக்குளம் கிராமம், அருள் நகரைச் சேர்ந்த பட்டா எண் 97, RS எண் 227/6A, பரப்பளவு 47 சென்ட், இதன் வடக்குப் பக்கத்தில் அடங்கிய பரப்பளவு 31–1/2 சென்ட், வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டது, இதிலடங்கிய மனை எண்கள் 3 & 4, மொத்தப் பரப்பளவு 5390 சதுர அடி அதாவது 12 சென்ட் 162–3/4 சதுர அடி மற்றும் கட்டப்பட்ட ஒரு வீடு உட்பட. கதவு எண் 4/2. **எல்லைகள்: வடக்கு:** ராமசாமி பிள்ளை அவர்களின் நஞ்சை நிலம் தற்போதைய வீடு, **தெற்கு:** கிழக்கு மேற்கு சாலை, **கிழக்கு:** ஐயனன் கோன் அவர்களின் நஞ்சை நிலம் தற்போதைய வீடு, **மேற்கு:** மனை எண் 2 மற்றும் கட்டப்பட்ட ஒரு வீடு. **அளவீடு;** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 81–1/2 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் 58–1/2 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் – 91–1/2 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் – 62–1/2 அடி, ஆக பரப்பளவு 5390 சதுர அடி.

அட்டவணை II

மின்–ஏல விவரங்கள்

சொத்துக்/களின் விவரம்: அட்டவணை I–இன்படி

மின்-ஏல தேதி மற்றும் நேரம்: 15.05.2025 அன்று முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை எண்ணிக்கை வரம்பின்றி தலா 5 நிமிடங்கள் காலநீட்டிப்புடன்.

ஏலம் சமர்ப்பிக்கும் தேதி மற்றும் நேரம் : 13.05.2025 மாலை 4.00 மணிக்கு முன்பு

நிர்ணய விலை : ரூ.3,00,00,000/–(ரூபாய் மூன்று கோடி மட்டும்)
*இந்த விலைக்கு கீழே பிளாட்/சொத்துக்கள் விற்கப்பட மாட்டாது.

முன்வைப்புத் தொகை (EMD) (நிர்ணய விலையில் 10%) ரூ.30,00,000/–(ரூபாய் முப்பது லட்சம் மட்டும்)

ஏல உயர்வுத் தொகை : ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)

தொடர்பு நபர் விவரங்கள் மற்றும் கைப்பேசி எண்கள்: திரு. சம்சுதீன் மொய்தீன்: 9841444073, Ms. வச்சனா சுவாமி: கைப்பேசி: 7406368669

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய, பின்வரும் இணையதள இணைப்புகளை பார்வையிடுக: https://sarfaesi.auctiontiger.net/EPROC/ மற்றும் www.axisfinance.in

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழான சட்டப்படியான 15 நாள் விற்பனை அறிவிப்பு

மேற்குறிப்பிட்ட தேதியில் மின்-ஏல விற்பனை நடைபெறுவது குறித்த இந்த அறிவிப்பு, கடன்தாரர்/கள், ஜாமீன்தாரர்/கள், அடமானதாரர்/கள் ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழான அறிவிப்பாக கருதலாம்.

தேதி: 28.04.2025, இடம்: மும்பை ஒ/ம்- அதிகாரப்பூர்வ அலுவலர், ஆக்சிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1ஆவது தளம், நூற்றாண்டு சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 15 நாள் மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்